344

பதிவு எண் — M 5720 வெள்ளிக் கிழமையில் குருகுலத் தாள்

OFFICE
14 APR 1956
MADRAS


# முல்லைக்கொடி

கிழமை வெளியீடு:- சான்றாண்மை இதழ்.

ஆசிரியர்: இளவழகனார்.

கிளை–8 குருகுலம், மாம்பாக்கம்; மன்மத: மாசி, ௧௯ 2—3—56 தளிர்–19


திருக்குறள் பிழிவு:

## ஊக்கமும் ஆக்கமும்

மக்கள் யாரும் நாட்டில் வறியராய் இருத்தல் ஆகாது தான்; திருவள்ளுவரும் வழி செய்திருக்கின்றார்.

பொருள் தேட வேண்டுவது ஒவ்வொருவரின் கடமை; இல்லாவிட்டால், மற்றவர்கள் வீட்டில் இருக்கும் காடிக்கும் உப்புக்கும் அவர்களால் கெடுதிதான். 'செய்க பொருளை' 'செய்க பொருளை' என்று ஒவ்வொருவர் உள்ளமும் ஊக்கம்பெற்றிருக்கவேண்டும். இந்த உள்ளத்தை நாட்டு மக்களிடம் எழுப்புவது முதற் கடமை; இந்த ஊக்கம் உடையவர்களிடம் ஆக்கம் தானே வழிதேடிக் கொண்டு சென்றடையும்; அதாவது, ஏதேனும் தொழில் வழி புலப்படும்; முயற்சிக்கு வாய்ப்புகள் அமையும் என்பது.

இப்படி ஊக்கமும் முயற்சியும் உடையவர்க்கு தொழில் முகங் காட்டி, அதன்வழி உணவு தேடிக் கொள்ளும்வரை, அவர் அழி பசி தீர்ப்பது, உடையோர் கடமை.

வேலையில்லாத்திண்டாட்டத்துக்கு மருந்து, உழவு தான் என்பது முன்னோர் முடிபு. ஏராளமான நிலங்கள் இன்னமும் நாட்டில் பயிரில்லாமல் இருக்கின்றன. இலம் என்று அசைஇ இருப்பாரைக் கண்டு நிலம் என்னும் நல்லாள் நகுகின்றனள். கட்டாயமாய்த் தேவையான நல்ல துணைத் தொழில்கள் நடை பெறுவது உதவியே. ஆனால், வாழ்க்கைக்கு முக்கியமல்லாத தொழில்களை, உள் நாட்டில் செலாவணியாகாத தொழில்களை, வெளி நாட்டுச் சந்தைகளில் வேண்டுமென்றே திணிக்கும் தொழில்களை, உடம்பைக் கெடுக்கும் தீய பொருள்களுக்கான தொழில்களை, வேலை தரவேண்டும் என்பதற்காக, நல்லறிஞர் ஒப்புவதில்லை.

## "முல்லைக் கொடி"

(செந்தமிழ்க் கிழமை வெளியீடு)

8-ம் ஆண்டுக் கையொப்பம்
(28-10-55 முதல்)

| | | | | |
|---|---|---|---|---|
| உள்நாடு | ரூ. | 4 | 0 | 0 |
| வெளி நாடு | ரூ. | 6 | 0 | 0 |
| தனித் தாள் | ரூ. | 0 | 1 | 0 |
| ஆயுள்— | | | | |
| கையொப்பம் | ரூ. | 100 | 0 | 0 |

விற்பனையாளர்கள், தேவைக்கு முன் பணத்துடன் எழுதுக.

முகவரி:—

குருகுலம், மாம்பாக்கம்;
மதுராந்தகம் P. O.
(தென்னிந்தியா)


"யாதும் ஊரே, யாவரும் கேளிர்
தீதும் நன்றும் பிறர்தர வாரா"

—புறநானூறு.


| இணை 8 | மன்மத, 2-3-56 | தளிர் 19 |
|---|---|---|


# தஞ்சை மாவட்டத்தின் கலைக் கோயில்கள்

தஞ்சையிலிருந்து காரில் புறப்பட்டால் நேரே திருவையாறு வந்து சேருவோம். திருவையாறு, அப்பருக்குக் கைலைக் காட்சி கொடுத்த இடம். கோயில் பெரிய கோயில். இந்தக் கோயிலில் ஐயாறப்பன் கர்ப்பக் கிரகத்திற்குப் பின்னே தனுர் சுப்பிரமணியர் கல்லுருவில் கம்பீரமாகக் காட்சி கொடுக்கிறார். எல்லா இடத்தும் வேலேந்தி நிற்கும் முருகன் இங்கு வில்லேந்தி நிற்கிறார். எந்த மூர்த்தியைக் காணத் தவறினும், இந்த மூர்த்தியைக் காணத் தவறிவிடாதீர்கள்.

இனி நேரே கும்பகோணம் வந்து சேரலாம். வழியிலே திருப்பழனம், வடகுரங்காடுதுறை, சுவாமிமலை என்ற தலங்கள் உண்டு. அவகாசமுள்ளவர்கள் அங்கெல்லாம் தங்கி, சுவாமி தரிசனம் செய்து கொள்ளலாம்.

இதற்கெல்லாம் அவகாசம் இல்லாதவர்களும் கும்பகோணத்தை அடுத்த தாராசுரத்திற்குப் போய், அங்குள்ள கலசம் இல்லாத விமானத்தை அடையாளமாகக் கொண்டு அங்குள்ள ஐராவதேசுவரர் கோயிலுக்குள் நுழைய வேண்டும். கோயில் பிரகாரம் முழுவதும் நெருஞ்சி முள் இருக்கும். இருந்தாலும் காலில் தைக்கும் முள்ளையெல்லாம் பிடுங்கி எறிந்துகொண்டே, அங்குள்ள அன்னபூரணி, அதிகார நந்தி, கார்த்திகேயன். அக்னிதேவன் முதலிய கலா உருவங்களைக் கட்டாயம் பார்த்து விடவேண்டியதுதான்; கோயில் இன்று இருக்கும் நிலைக்காக இரண்டு சொட்டுக் கண்ணீரும் சிந்த வேண்டியதுதான். அதன் பின் வரலாற்றுப் பிரசித்தி பெற்ற பழையாறை, பட்டீச்சுவரம், சத்தி முத்தம் முதலிய இடங்களையும் பார்த்துவிட்டு, விடுவிடு என்று கும்பகோணத்திற்கே வந்துவிட வேண்டும்.

கும்பகோணத்திலே கலை அழகு நிறைந்த கோயில் இரண்டு. ஒன்று இராமசாமி கோவில்; இந்தக் கோயிலைப்பற்றி ஒரு தனிக் கட்டுரையே எழுத வேண்டும். மற்றொரு கோயில் குடந்தைக் கீழ்க்கோட்டம் என்னும் நாகேசுவர சுவாமி கோயில்; இதைப் பற்றியும் நன்கு தெரிந்து கொள்ள வேண்டும். இங்கே காணவேண்டிய கல்லுருவங்கள் பல தெற்குப் பிரகாரத்தில் இருக்கும்; பெண்ணுருவங்கள் மிகவும் அழகு வாய்ந்தவை. மேலப் பிரகாரத்தில் இருக்கும் அர்த்தநாரியோ அதி அற்புதமான வேலைத் திறனை வெளியிடும். துர்க்கைக் கோயிலுக்குக் கீழ்ப்புறம் ஒரு பொந்துக்குள் ஒளிந்து கொண்டிருக்கும் பிட்சாடனரைக் காணத் தவறிவிடக் கூடாது. இந்தக் கோயில் நடராசர் சந்நிதியே ஒரு தனிக்கோயில். நடராசரது உருவமும் பெரிய உருவம். நாலு அடி உயரம் இருக்கும். இந்த மூர்த்தியை நீங்கள் எந்தக் கோணத்தில் இருந்து பார்த்தாலும் உங்களைப் பார்த்துச் சிரிப்பது போலவே தோன்றும்.

அங்கிருந்து மாயூரம் பாதையில் திரும்பினால் திரிபுவனம் வந்து சேருவீர்கள்; அங்குள்ள விசேடமான சந்நிதி சரபமூர்த்தியின் சந்நிதிதான். அந்தச்

வினை நோய்க்குத் திருக்குறள் மருந்து; இந்நூலின் பாக்கள், சிந்தித்தல் கேட்டல் ஓதுதல் செய்யுங்கால் சொற்பொருள் நயங்களால் இன்பம் விளைக்கும்; திருக்குறட் பாக்கள் தெய்வத் தன்மையுடையன; அத் தெய்வத் தன்மையால் வினைத் துயரும் ஒழிக்கும்.

நல்வழி நன்மக்களுக்குத் தொன்று தொட்டே அமைந்துள்ளது; ஆனால், அம் முந்திய நன்னெறி, சமயத்தாரது பல வகைப்பட்ட கற்பனையினால் மறைபட்டு நின்றது; திருக்குறளால் நாம் அறிய நேர்ந்தது.

திருவள்ளுவர் முற்றுணர்ந்தவர்; புறத்திருள் நீக்குதற்கு, வெள்ளி வியாழன் ஞாயிறு திங்கள் எனப் பல உள; அகத்திருள் நீக்குதற்குத், திருக்குறள் ஒன்றே உள்ளது.

வள்ளுவர் பாட்டிற்கு வளம் என்பது, அதன் சுவை; திருவள்ளுவர் பாட்டு, தீஞ்சுவை மிக்கது. தேவரமிழ்தம், நாவில் சுவை பயப்பது; நாவிற் பட்ட சிறிது பொழுதளவே தீஞ்சுவை பயப்பது; ஆனால், திருக்குறள் பாட்டு, நெஞ்சிற் சுவை பயப்பது; நெஞ்சின்கண் நிலை பெற்று ஒழிவின்றித் தீஞ்சுவை பயப்பது. தமிழில் எழுந்த திருக்குறள் மும்மடி சிறந்த முப்பால்! இந்தப் பால் எல்லா உலகத்தாரும் மகிழ்ந்துண்டு சுவையறிவர். அதாவது, கரும பூமியாகிய இம் மண்ணுலகத்துள் தோன்றி



சொல்லால் பரந்த நூல்களை ஆய்வோர், மலை அகழ்ந்து எலி பிடித்தல்போல மிக வருந்திச் சிறு பயன் கொள்ளுவர்; திருக்குறள் பொருள் பரந்த நூல்; சில நாள் பல பிணிச் சிற்றறிவுடையோர்க்கு விதி விலக்குகள் உள்ளங்கை நெல்லிக் கனிபோலக் கண்டு தெளியுமாறு உணர்த்தித் தடுமாற்றம் தீர்த்தலால், திருக்குறளே உலகுக்குத் துணை.

அறிதற்கரிய வேதாந்தப் பொருளும் உடையது திருக்குறள்; உயர்குலத்தாரேயன்றி ஏனையோரும் இதனை ஐயந்திரிபின்றி எளிதில் அறிந்துகொள்ளலாம். திருக்குறளே குருவாகவும் குரு உணர்த்தும் நூலாகவும் விளங்குகின்றது.

பாரத இராமாயணம் கதை வடிவிலும் சுருதி மிருதிஎன்பன விதிவடிவிலும் இருந்து ஒன்றைஒன்று ஒப்பன. திருக்குறளுக்கு அப்படி ஒப்புச் சொல்லத் தக்கது யாதும் இல்லை. எப்பொருளும் யாரும் இயல்பின் அறிவுறச் செப்புதல் வேதத்திற்கு இல்லாமையால் முன் வேதமும் இப் பொது மறைக்கு நிகரில்லை.

கற்பிதமாகிய சாதி சமயங்களின் மானம் பற்றி உள்ளதை இல்லதாகவும் இல்லதை உள்ளதாகவும் சிறிதைப் பெரிதாகவும்பெரிதைச்சிறிதாகவும்தீயதை நல்லதாகவும் நல்லதைத் தீயதாகவும் புனைந்து பிறர் பிணங்கும்படி சொல்லப்பட்டதன்று, திருக்குறள்! இதனைச் சில தடவை பயின்றால் போதாது, பல

காலும் பயிற்சி செய்ய வேண்டும்; அவ்வறிவைக் கொண்டு பிறர்க்கெல்லாம் விதிவிலக்குகளைக் கற்பித்தல் வேண்டும்.

பிற நூலாசிரியர்க்கெல்லாம் அவர் எதிரிகளாலே மறுக்கப்பட்டுவரும் குற்றம் போல்வது திருவள்ளுவர்க்கு இல்லை; அதனால் இவர் குற்றமில்லாத திருவள்ளுவர்!

குறுகிய பாக்களாய் நின்று கற்போர்க்கு வருத்தம் விளையாமை பற்றித் திருக்குறளை 'இன் குறள்' எனலாம்; உணர்வுடையோரால் விரும்பப்பட்ட நற்குணம் உடைமைபற்றி 'ஒண் பொருள்' எனலாம்.

மேம்பாட்டுக்குத் தக்கவை, குறள் வெண்பாக்களோ முன் வேதங்களோ? நூலாசிரியர்க்கும் நூல் சொன்ன பொருளுக்கும் தகுதி தோன்றச் சொல்லப்பட்ட குணங்களால் திருக்குறள் வேதம் அவ்வேதத்தினும் சிறப்புடையது!

திருவள்ளுவர் உலகத்தவர் எளிதின் உணரும்படி திருக்குறளைக் கூறினர். இதனாலேதான், பழைய வேதம் இருந்தும் வேறு இது சொல்லுதற்குக் காரணம் நேர்ந்தது; பழைய வேதம் தேய வழக்கிற் படாதது; வருந்திக் கற்போர்க்கு மாத்திரம் புலப்படுவது; எல்லா மொழிகட்கும் முற்பட்டுக் கடவுள் மொழியாய் நிற்பது.

உலகத்தில் திருவள்ளுவரே புலவர்; புலவர் என்பது திருவள்ளுவர்க்கே காரணப் பெயராம்.



மனையகத்து ஏற்றப்படுகிற விளக்கு அம் மனையகத்துள்ளார்க்கு மாத்திரமே பயன்படுவதாய் உள்ளது; ஆனால் திருவள்ளுவர் ஏற்றிய திருக்குறள் விளக்கு, உலகத்து வாழ்வோர் பலர்க்கும் அகவிருள் நீக்கிப் பயன்படுதலால் இது பலகோடி மடங்கு மிக்குச் சிறந்து நிற்கின்றது! திருக்குறள் செவ்விய சொல் அமைந்தது; அதன் ஒவ்வொரு சொல்லும் ஒளிப் பிழம்பு! அன்பால் நிகழும் நன் மக்களின் வாழ்க்கை யின்பந்தான், திருக்குறள் ஒளியை உலகில் வளர்க்கும் நெய்!

பிறிதொன்றனாலே நீக்கப்படாத அஞ்ஞான இருளைத் திருக்குறள் நீக்குகின்றது. உலகுக்கெல்லாம் பேரொளியாகிய சூரியனும் திருக்குறளுக்கு ஒருபுடை ஒப்பாமல்லது முற்றும் ஒப்பாகாது.

குறள் தோன்றுதற்கு முன்னெல்லாம் உண்மை துணியப்படாமல் இருந்தது; 'பொய்' மெய்போல் மேற்கொள்ளப்பட்டும், 'மெய்' பொய் போல் கைவிடப்பட்டும் மயங்கிக் கிடந்தன. திருக்குறள் மெய்யுணர்வு பயக்கும் சிறப்புடையது.

பிற நூலாசிரியர்க்கெல்லாம் அறிந்து சொல்லுதற்கு எட்டாதிருந்த 'அறம்' முதலியவற்றின் நுட்பங்கள், திருக்குறளால் விளங்கின; இம்மை மறுமை வீடுகளைக் குறித்து உணர்தற்குரிய உறுதிப் பொருள் நான்கும் இவ்வொரு நூலால் உணர்தலின், மக்களுக்கு இனி யாதொன்றாலும் குறைவில்லை.

பர்) ஒருவனுக்கே ஓதியுணர முடிவுபோகாது; காரணம், அவற்றிற்கு வேறுவேறு அதிகாரிகள் தேவை; அவை எளியன அல்லவாதலின் 'அரு மறைகள்' எனப்படும். திருக்குறளை எந் நிலையினரும் ஓதலாம்; இதனை ஓதுதற்குப் பெண்பாலார்க்கும் அதிகாரம் உண்டென்பது கொள்ளப்பட்டது. நமக்கெல்லாம் அறிவொழுக்கங் கொளுத்தி நல்வழிப்படுத்த வந்த பரமாசாரியர் திருவள்ளுவரே என்னும் உரிமை தோன்ற யாரும் 'நம் வள்ளுவனர்' என்பர்.

ஒவ்வொரு காலத்தில் ஒவ்வொரு பாவலர் ஒவ்வொரு குணத்தினல் சிறந்துவிளங்க நூல் செய்தனர்; திருவள்ளுவரோ என்ருல், எல்லாக் குணங்களாலும் சிறந்து விளங்கத் திருக்குறள் செய்தார்.

அறுபத்து நான்கு கலைகளாலும் நிறைந்து, ஆராய்ச்சி செய்தற்கு இனிதாய் உள்ளது திருக்குறள்! அகக் கண்ணுக்குக் குணம் உடையது; நயத்தால் விளைவதாகிய இனிய பயனுடையது! திருக்குறளில் நயம் என்பது, மறுப்படாமை, மழுங்காமை, குறைவுருமை முதலியன; பயன் என்பது, இம்மை மறுமை வீட்டு இன்பங்கள்.

திருக்குறளோடு ஒப்புமை சொல்லுதற்கு நூல்களில் ஒன்றும் இல்லை; மற்றப் பொருள்கள் பலவற்றிலும் இல்லை.

நாயனரது திருவாயிற் பிறந்த செஞ்சொல் அற முதலியவற்ருேடு கூடி அகத்திருளாகிய அஞ்ஞானத்தை ஓட்டுகின்றன.



உயர்வு ஒப்பு அற்ற இவரது புலமையைக் குறித்து நோக்குங்கால் ஏனையோர் புலமை, புலமையன்ருய் முடியும்; புலமையாவது, பலவேறு வகைப்பட்ட நூலுணர்ச்சிகளை யெல்லாம் ஒருங்கே கொண்ட பேரறிவுடைமை.

திருக்குறளில் இன்பத்தின் காரணம் விதிக்குறளாலும் துன்பத்தின் காரணம் விலக்குக் குறளாலும் சொல்லப்பட்டன. வேண்டுவனவெல்லாம் திருக்குறளால் உலகம் தொகுத்துணர்தலால் மனம் மகிழ்கின்றது. முன் வேதம்போ லன்றிப் பலர்க்கும் இது உபயோகமானது; பல நூல்களிலும் இது சிறந்து நிற்கின்ற மாட்சிமையுடையது. வேதக் கருத்திலும் சிறந்த பொருளை எடுத்து விளக்குவது.

திருக்குறளால் உலகுக்கு நன்மை விளைகின்றது; 'இது ஆகாதது, இது ஆவது' என்று கருத்துக்களை வழுக்குதலில்லாமல் தெளிந்து கொள்ள முடிந்தது.

வடமொழியிலும் தென்மொழியிலும் பிற மொழிகளிலும் முனிவரும் புலவரும் பிறரும் செய்த நூல்கள் எதுவும் திருக்குறளோடு சேர்க்கப்படுவதற்குத் தகுவதன்று.

திருக்குறளை ஓதுகின்றவர்க்கு, பொருட்பேறு உண்டாகும்; அறம் இன்பங்களுக்குக் காரணமாதற் சிறப்புடையது பொருள்.

மேலும், வாக்கிற்கு, கடுஞ்சொல் பொய் கோள் புறங் கூறல்களும் நீங்கும்; மனத்திற்கு, பிறனில்

விழைதல், பிறன் பொருள் விழைதல், பிறன்பொருட்குக் கேடு எண்ணல், பிற உயிர்க்கு இறுதி எண்ணல்களும் நீங்கும்; காயத்திற்கு, பிறன்மனை புணர்தல், உயிர்க்கொலை செய்தல், பழியுணவு உண்ணல், பிறர் பொருள் வௌவல் ஆகிய குற்றங்களெல்லாம் நீங்கும்.

ஆனால், திருக்குறளை ஓதாதவரது வாக்கிற்கு, இன்சொல் சொல்லி வாழ்தல் உண்டாகாது; அவர் மனத்திற்கு, சொற்களின் சுவையை அறிதல் இயலாது; காயத்திற்கு, நல்ல செயல் உண்டாகாது; அப்படிப்பட்டவரிடத்தில் திரு சேராது.

நோயாளிக்கு மருந்தும் அநுபானமும் பத்தியமும் போல உலகத்தார்க்கு விதியும் பத்தியும் ஞானமும் ஒன்றற்கொன்று முரணாது கூடி நிற்கும் செம்மை நெறியில், திருவள்ளுவர், திருக்குறள் வழங்கினர். வீட்டு விதி, துறவறத்திற் காணலாம்.

முன்வேதத்திலிருந்து கருத்துக்களை உள்ளவாறு எடுத்துச் சொல்லுதல் அறிவுடையோராகிய போதகாசிரியர்க்கும் முடிவதில்லை. ஒழுக்கம் பூண்டோராகிய கேட்டொழுகும் மாணவர்க்கும் அவ் வேதத்திற் சொல்லப்பட்ட படி வழுவாமற் செய்தல் கூடாமையாகும்; திருக்குறள் வேதம் அப்படிப் பட்டதன்று. மக்களுக்கு ஆவனவும் ஆகாதனவும் அறிவுடையோர் யாவரும் இதிலிருந்து எடுத்துச் சொல்லுதற்கு வல்லவராவர்; ஒழுக்கம் பூண்டோரும், திருக்குறள் சொல்லியபடியே ஒழுகுவர். ஓப்பில்லாத ஒழுக்கம் கொல்லாமை முதலியன.



சொற் சுருக்கத்தால் ஓதற்கு எளிது என மன எழுச்சி உண்டாக்கி, கற்போரது அறிவளவிற் கேற்கப் பொருளளவு விரிய வைத்தார் திருவள்ளுவர்; இக் காரணத்தால் நினைக்கப்படும் பொருள்களெல்லாம் திருக்குறளில் தோன்றுகின்றன, இப்படி ஓர் வல்லமையால் திருக்குறள் இயற்றப் பெற்றது.

வடமொழியும் தென்மொழியும் பிற மொழிகள் போல் அல்ல; பாணினியாரும் அகத்தியனாரும் முதலாகிய முனிவர்களாலே செய்யப்பட்ட இலக்கண நூல்களாலே சீர்திருந்தி நிற்பன; வடமொழி, பிராகிருத முதலியவற்றிற்கு முதலாய் நிற்பது; தென்மொழி ஆந்திரம் முதலியவற்றிற்கு முதலாய் நிற்பது; வடமொழியும் தென்மொழியும் ஒன்றற்கொன்று குறைபாடுடைத்தன்று; வேதம் உடைமை பற்றி வடமொழிக்குச் சொல்லப்பட்ட உயர்வு, தென்மொழிக்கண் திருக்குறள் உண்டாதலின் இனி இல்லை.

திருவள்ளுவரால் உலகத்தார்க்குப் புத்தியாகச் சொல்லப்பட்ட நூல் திருக்குறள்! திருக்குறளை ஓதியுணர்ந்தோர் அருமறைகள் ஐந்தும் சமய நூல் ஆறும் ஓதியுணர்ந்தோராவர்; அவை பலவற்றினும் வேறு வேறு வகைப்பட்டுச் சிறந்து நின்ற கருத்துக்களெல்லாம் இவ்வொரு நூலில் அடங்கி நிற்கின்றன. வேதங்கள் ஐந்தும் (பாரதம் ஐந்தாவது வேதம் என்

சந்நிதிமுன் இரண்டு பெண்ணுருவங்கள் ஏதோ ஒரு கொடியைச் சுற்றி வளைத்துக் கொண்டு நிற்கின்றன. துடிக்கும் உணர்ச்சியை ஒவ்வொரு அவயவத்திலும் காட்டியிருக்கிறான் சிற்பி. இந்தப் பெண்களிடம் பிரியாவிடை பெற்றுக் கொண்டு, திருவிடைமருதூர் ஆடுதுறை எல்லாம் கடந்து, குத்தாலம் வந்து சேரலாம். அங்கிருந்து வடகிழக்கே மூன்று கல் போனால், திருவேள்விக்குடி என்ற சிற்றூர் வரும். திருவிளக்குடி என்று விசாரித்துத்தான் ஊரைத் தெரிந்துகொள்ள வேண்டும். அங்கோ, சும்மா பூசை இல்லாது வைத்திருக்கும் விக்கிரகங்களில், கல்யாணசுந்தரரும் அவருடைய தேவியும் உண்டு. கலியாண காலத்தில் பெண்ணினது உள்ளத்தில் தோன்றும் நாணத்தை இந்தச் சிலையில் உள்ள பார்வதி அங்கம் முழுவதுமே காட்டுகிறார்கள். நிற்கின்ற ஒயிலையே அனுபவிக்கலாம் எவ்வளவு நேரம் வேண்டுமானாலும்.

இங்கிருந்து புறப்பட்டு, மாயூரம் வந்து அங்கிருந்து வைத்தீஸ்வரன் கோயில் வந்து வைத்தியநாதனையும் முத்துக்குமரனையும் தரிசிக்கலாம். கொஞ்சம் மேற்கே போய்த் திருப்புன்கூரில் சிவலோகநாதனையும், நந்தனுக்காக விலகிய நந்தியையும் காணலாம். அதன் பின் சீர்காழி வந்து தோணியப்பர் —சட்டநாதர் எல்லோரையும் தரிசித்து விட்டுத் திருவெண்காடு செல்லும் வழியில் ஒரு கிளைப் பாதையில் திரும்பி திருநகரி வந்து சேர்ந்தால் அங்குள்ள பெருமாள் கோயிலில் உள்ள திருமங்கை மன்னனது உருவத்தைக் காணலாம். அலங்காரம் பிரமாதமாக இருந்தாலும் அந்த அலங்காரங்கள் இல்லாமல் இருக்கும் அந்த ஆழ்வாரது உருவமே அழகானது. ஆனால் கோயில் அர்ச்சகர்கள் அவ்வளவு எளிதாகக் கவசத்தைக் களைந்து ஆழ்வாரின் அழகை அனுபவிக்க உங்களை அனுமதித்துவிட மாட்டார்கள்.

அங்கிருந்து புறப்பட்டால் நேரே திருவெண்காடு. அங்கு அகோர சிவனின் அற்புத உருவம். திருவெண்காட்டில், பூமிக்கு அடியிலிருந்து நிரம்பவும் பழைய காலத்துச் சிற்பங்கள் சில சமீபத்தில் கிடைத்தன. அவை எல்லாம் நிரம்ப அழகு வாய்ந்தவை. அவைகளைக் காணத் தவறிவிடவேண்டாம். இது இடைப் பிறவரல் என்றாலும் வெண்காட்டோடு சம்பந்தப்பட்ட உருவங்கள் என்பதை மறவாமல் குறித்திருக்கின்றேன்; அவ்வளவு தான்.

திருவெண்காட்டைவிட்டு நேரே இரண்டு மூன்று கல் தூரத்தில் உள்ள சாய்க்காடு, பல்லவனீச்சுரம் என்னும் ஊர்களுக்குப் போகலாம். இரண்டும் இன்று சிற்றூர்கள். ஆனால் சிலப்பதிகாரம் பாடிய இளங்கோவடிகள் அன்று புகழ்ந்து பாடிய காவிரிப்பூம் பட்டினத்தை அடுத்தவை. இதை ஒட்டிய கடற்கரையில்தான், கோவலனும் மாதவியும் அற்புதமான வரிப் பாடல்களைப் பாடினார்கள் என்று எண்ணுகின்றபோது அந்தப் பாடல்களையே இன்றும் கடல் அலைகளின் ஓசையில் கேட்டு மகிழலாம். காவிரிப்பூம்பட்டினம் கடல் கொள்ளப்பட்டு விட்டாலும், அதே கடலிலிருந்து ஒரு மூர்த்தி, ஆம் அற்புதமான வேல் ஏந்திய வேலன் தமிழர்களுக்குக் கிடைத்திருக்கின்றான். "வானோர் வணங்கும் வில்தானைத் தலைவன்" என்று நக்கீரரால் பாராட்டப்பட்ட அந்த மூர்த்தி தமிழ் நாட்டின் சமரச உணர்ச்சிக்குச் சிறந்த எடுத்துக் காட்டாகச் சாய்க்காட்டில் விளங்குகிறான். வேலேந்திய முருகனும் வில்லேந்திய இராமனும் தமிழ்நாட்டின் தனிப்பெருங் கடவுளர். இரண்டு உருவும் ஒன்றாய் இசைந்து வில்லேந்திய வேலனாக உருக்கொண்டிருக்கிறது. மூர்த்தியின் அழகோ அதி அற்புதமானது. (வரும்)

—தொ. மு. பாஸ்கரத் தொண்டைமான்

—தமிழ் நாடு.

# நீராட்டு விழா

(முன் தொடர்ச்சி)

"தாவிமுதற் காவிரி நல்
யமுனை கங்கை
சரஸ்வதிபொற் ருமரைபுட்
கரணி தெண்ணீர்க்
கோவியொடு குமரிவரு
தீர்த்தம் சூழ்ந்த
குடந்தைக்கீழ்க்
கோட்டத்தெம்
கூத்தனுரே"

என்று இவ்வுண்மை அப்பர் தேவாரத்தில் வருகின்றது. அப்பர் போன்றவர் கூறும் உண்மைகள், தக்க சான்றுகள்.

மகாமக காலத்தில் வான் இயக்கத்தில் குரு சந்திர சூரியக் கிரகங்களின் பார்வைச் சிறப்பு கூடுவது போல, பூமியின் உள் இயக்கத்திலும் இந்திய நதிகள் பூமிக்குள் கும்பகோணத் தலத்தில் நீரோட்ட இயக்கங்காரணமாக ஒருசந்திப்புப் பெறுவதும் இயல்பாய் இருக்கின்றது. அந்த நேரத்தில் அனைவரும் அங்கே நீராடினுல் எல்லாத் தலங்களிலும் நீராடியது போன்ற நலம் ஏற்பட்டு விடும்.

"பூமருவும் கங்கைமுதற்
புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தான் ஆடுதற்கு
வந்துவழி படுங்கோயில்"

என்று வரலாற்றுப் பேராசிரியராகிய சேக்கிழார் பெருமானும் குடந்தையில் நிகழும் மகாமகத்தின் இந்நீராட்டுண்மையை எடுத்துக் காட்டுவர்.

இளம் வெயிலில் ஆற்றின் நீராடல் எப்படிச் சிறக்கின்ற தோ அதைப்போலக் குரு சந்திரப் பார்வையில் திகழும் சூரியக் கதிரொளியில் நதிகளின் சந்திப்பு நீரூறலில் நீராடுதல் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை பெருமாட்சி தருகின்றது!

இ. அ.

—தென்னிந்திய ரெயில்வே வெளியீடு.

---

## முல்லைக் கொடி நேயர்க்கு

குருகுலம் நகரத்துக்குத் தொலைவில் தனி வெளியில் அமைந்திருக்கிறது. அச்சகத்தில் ஆட்களுக்கு இடையூறு நேருகிறபோது, உடனே வகை செய்து கொள்வது மாட்டாமை; ஆயினும், சற்று முன் பின் காலத் தாழ்வில் இதழ் வெளிவர நேர்ந்தால், அன்பர்கள் அதை ஒரு பொருட்டாகக் கருதாமை ஊக்கமளிக்கின்றது; எனினும், காலத்தில் இதழ்கள் வெளிவருதற்கு இயன்ற முயற்சிகளுடன் இருத்தலை அன்புடன் தெரிவித்துக் கொள்கின்ருேம்.

* * *

கையொப்ப நேயர்கள் தம் முகவரி மாறும் பொழுது, அம் மாற்றத்தைக் குருகுலத்துக்கு உடனே நினைவாகத் தெரிவிக்கும்படி வேண்டுகிருேம். தெரிவிக்காதபோது இதழ் இடையே தவறிப் போவதற்குத் திரும்பக் கேட்டால் கிடைக்காது; தொடர்ந்த நூல்கள் வெளிவருதலால், அது மாட்டாமையா யிருக்கிறது.

* * *

ஒவ்வொரு கிழமையும் கையொப்ப நேயர்க்கு, இதழ்கள், வழுவாமலிருக்கும் பொருட்டுக் குருகுலத்தில் சரிபார்த்தே அனுப்பப்பெறுகின்றன. இடையில் இதழ்கள் தமக்குச் சேரவில்லை என்று அன்பர் இரண்டொருவர் தெரிவித்துள்ளனர். அவர்கள், தம் வட்டத்து அஞ்சல் அதிகாரிகளிடம் அன்பு கூர்ந்து ஏற்பாடு செய்து கொள்வது பாதுகாப்பாய் இருக்கும்.

—செய்தியாளர்

---

**Phone 55034 Tel. Enkayam**

கைத்தறி ஆடைகளில்
சிறந்தது எங்கள் எலிபெண்ட்
கிசான் டிரேட் மார்க்

பட்டாடைகளுக்கும்
நூலாடைகளுக்கும்
சிறந்த இடம்

கருப்பண முதலியார் ஸ்டோர்,
53. கிடங்குத் தெரு. சென்னை 1.

பதித்து அச்சிட்டு வெளியிடுவோர்: தி. சு. பாலசுந்தரம், குருகுல அச்சகம், மாம்பாக்கம்; மதுராந்தகம் (அஞ்)